StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM
## SUMMATIVE ASSESSMENT I - SEPTEMBER - 2012

### SUBJECT - TAMIL
### CLASS - IX

| | |
|---|---|
| Max. Marks : 90 | Time Allowed : 3 Hours |
| மொத்த மதிப்பெண்கள் : 90 | கால அளவு : 3 மணி நேரம் |

**The question paper is divided into four sections:**
இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| SECTION : A | | Reading comprehension | - | 15 Marks |
| பிரிவு : | அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION : B | | Writing | - | 20 Marks |
| பிரிவு : | ஆ | எழுதுதல் | - | 20 மதிப்பெண்கள் |
| SECTION : C | | Grammar | - | 15 Marks |
| பிரிவு : | இ | இலக்கணம் | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION : D | | Literature/Text Books | - | 40 Marks |
| பிரிவு : | ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல் | - | 40 மதிப்பெண்கள் |

---

குறிப்பு : * கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
* விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
* வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

## பிரிவு - அ

1. கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

கீழாநெல்லி அல்லது கீழ்க்காய் நெல்லி என்று அழைக்கப்படும் தாவரம் ஒரு மருத்துவ குணமுடைய செடியாகும். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இச்செடி காணப்படுகிறது. சுமார் ஒரு அடி உயரம் வரை வளரும் தன்மை உடையது. தொன்றுதொட்டே தமிழர் மருத்துவத்தில், மஞ்சள் காமாலை நோய்க்கு இம்மூலிகையை பயன்படுத்தி வந்துள்ளனர். இந்தியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கூடங்களில் இம்மூலிகை பல்வேறு விதங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மஞ்சள் காமாலை, சிறுநீரக நோய்கள், குடல்புண், தொண்டை நோய்கள், வயிற்றுவலி, அதிக உஷ்ணம், கண் நோய்கள், பசியின்மை, தோல் நோய்கள், குருதிவடிதல் மற்றும் பல வகை நோய்களுக்கான மூலிகை மருத்துவத்தில் கீழாநெல்லி பயன்படுகின்றது.

கீழ்க்காய் நெல்லியில் பைல் நிரூலின், நார் செக்குரினின், 4-மெதாக்ஸி செக்குரினின், நிர் பைலின், தேலிக் ஆஸிட், எல்லாஜிக் ஆசிட், ஹேலிக் ஆஸிட் போன்ற 50-க்கும் மேற்பட்ட வேதிப்பொருட்கள் இருப்பதனை அறிவியல் ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர். நவீன மருந்தியல் ஆய்வுகளின் மூலம், கீழாநெல்லியானது காளான் நோய்கள், புற்று நோய்கள், இறுக்க நோய்கள் போன்றவைகளுக்கு எதிராக செயல்படுவதை கண்டுபிடித்துள்ளனர். மேலும் இம்மூலிகைக்கு, இரத்தத்தில் சர்க்கரையின் அளவை குறைக்கும் தன்மையுடையதெனவும் கல்லீரலை பாதுகாக்கும் தன்மையுடையதெனவும் பல்வேறு ஆய்வுகள் மூலம் தெளிவுபடுத்தி உள்ளனர். கீழா நெல்லியில் காணப்படும் ஹைப்போ பைலாந்தின், பைலாந்தின் போன்ற வேதிப் பொருட்கள் மீனுக்கும் தவளைக்கும் மட்டும் நச்சுத்தன்மையூட்டுவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

1. மஞ்சள் காமாலை குணப்படுத்தும் குறுந்தாவரம் யாது?

அ) இஞ்சி ஆ) கீழ்க்காய்நெல்லி இ) புதினா ஈ) வல்லாரை

2. எத்தனை வேதிப்பொருட்கள் கீழா நெல்லியில் உள்ளன?

அ) 40- ற்கும் மேற்பட்ட ஆ) 50 - ற்கும் மேற்பட்ட
இ) 30 - ற்கும் மேற்பட்ட ஈ) 60 - ற்கும் மேற்பட்ட

3. இந்தியாவின் எந்தெந்தப்பகுதிகளில் கீழா நெல்லிச் செடி வளர்கிறது?

அ) அனைத்துப் பகுதிகளிலும் ஆ) தமிழ் நாட்டில்
இ) தெற்குப்பகுதிகளில் ஈ) வடக்குப்பகுதிகளில்

4. கீழா நெல்லி எத்தனை அடி நீளம் வளரும்?

அ) நான்கடி உயரம் ஆ) இரண்டடி உயரம் இ) ஓரடி உயரம் ஈ) அரையடி உயரம்

5. மீனுக்கும் தவளைக்கும் மட்டுமே நச்சுத்தன்மையூட்டும் கீழா நெல்லியில் காணப்படும் ஒரு வகை வேதிப்பொருள்

அ) ஹைப்போ பைலாந்தின் ஆ) தேலிக் ஆஸிட்
இ) எல்லாஜிக் ஆஸிட் ஈ) பைல் நிரூலின்

2. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)

சங்க கால மக்கள் மண், செங்கல், மரம் ஆகியவற்றால் வியப்பூட்டும் வகையில் கோவில்களைக் கட்டினர். இவை காலத்தால் அழியக்கூடிய இயல்பினைக் கொண்டவை. இடைக்காலத்தில் பல்லவர்கள் என்றும் அழியா நிலையில் கற்கோவில்களை அமைத்தனர். மலைச்சரிவுகளைக் குடைந்து சிறிய கோவில்களை அமைத்தனர். குடைவரைக்கோவில் நான்கு அல்லது ஐந்து தூண்களைக் கொண்டதாகும்.

மாமல்லபுரத்தில் உள்ள ஒவ்வோர் இரதமும் ஒற்றைக்கல் கோவிலாகும். பாறைகளை கற்களாக உடைத்து, அக்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கி கோவில் கட்டினர். அத்தகைய சிறிய கோவில்களை மாமல்லபுரத்துக் கடற்கரையில் காணலாம். பெரிய கோவில்களைக் காஞ்சிபுரத்தில் காணலாம். அவை கைலாச நாதர் கோவில், வைகுந்தப் பெருமாள் கோவில், உலகளார்ந்த பெருமாள் கோவில் முதலியனவாகும். மாமல்லபுர ரதங்களும், கடற்கரைக் கோவிலும், காஞ்சியுலுள்ள கோவிலும் பாறைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட கோவில்களாகும். பல்லவர்களின் கட்டடக்கலைத் திறனை, மண்டபங்களிலும், கற்தூண்களிலும், வாயிற்காவல் சிற்பங்களிலும் காணலாம்.

1. காலத்தால் அழியக்கூடிய இயல்பினைக் கொண்ட கட்டடங்கள் எக்காலத்தைச் சார்ந்தவை?

அ) சங்க காலம் ஆ) இடைக்காலம் இ) பல்லவர் காலம் ஈ) இக்காலம்

2. நான்கு (அ) ஐந்து தூண்களைக் கொண்ட மண்டபக் கோவில் எது?

அ) உலகளார்ந்த பெருமாள் கோவில் ஆ) குடைவரைக்கோவில்
இ) கைலாசநாதர் கோவில் ஈ) வைகுந்தப் பெருமாள் கோவில்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

4. மாமல்லபுர ரதங்கள் எதைக்கொண்டு அமைக்கப்பட்டவை?

அ) களிமண் ஆ) செங்கல் இ) கற்கள் ஈ) பாறைகள்

5. ஒற்றைக்கல் கோவில் அமைந்துள்ள இடம் எது?

அ) காஞ்சிக் கோவில் ஆ) மலைக்கோவில் இ) மாமல்லபுரம் ஈ) காஞ்சிபுரம்

StudentBounty.com

3. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)

தூங்கிக்கொண்டிருந்த தமிழ் மக்களிடையில் ஒரு புத்தம்புதிய உணர்ச்சியை, நாட்டுப்பற்றை, சுத்தச் சுதேசியத்தை, அன்னியத்துணி விலக்கை, ஒற்றுமையை உண்டாக்கிய தலைவர்களுள் தலைசிறந்தவர் வ.உ.சிதம்பரனார். இவர் ஒரு வழக்கறிஞர். இவர் தாய்த்திருநாட்டின் திருப்பணியில் முற்றுந்துறந்த முனிவர் போல் சுகபோகங்களைத் துறந்து, தொண்டாற்றிப் பல ஆண்டுகள் சிறையில் தவம் கிடந்தார். அண்டினோர்க்கு வாரி வழங்கும் அன்னாருடைய செம்மை சான்ற திருக்கரங்கள் சிறையில் செக்கிழுக்கும் பெருமையை அடைந்தன. சிதம்பரனார் தென்னாட்டுத் திலகர் என்று தமிழ் மக்களால் அழைக்கப்பட்டார். சிதம்பரனார், அரசியலில் ஈடுபட்டு, பல கூட்டங்களில் சொற்பொழிவாற்றியவர். இவருக்கு உடலும் உயிருமாயிருந்தது தூத்துக்குடி சுதேசி நாவாய்ச் சங்கம். நாவாய்ச்சங்கத்தை நிறுவி அதன் அமைச்சராயிருந்து அல்லும் பகலும் ஓயாது உழைத்துத் தொண்டாற்றி வந்தார். கப்பல்கள் வாங்குவதற்காக மும்பை, கல்கத்தா போன்ற பல இடங்களுக்கும் சென்று வந்தார்.

சிறந்த வழக்கறிஞராயிருந்த சிதம்பரனார், சிறைக்கோட்டம் சென்று திரும்பிய பின் அக்காலத்திய அரசியல் சட்டம், சிதம்பரனாருக்கு மீண்டும் வழக்கறிஞர் பதவி வழங்க மறுத்தது. மீண்டும் பதவி கிடைக்க உதவி செய்தவர்களுள் சென்னை உயர்தர மன்றத்து நீதிபதியாயிருந்த இ.எஸ்.வாலஸ். எம்.ஏ,ஐ.ஸி.எஸ். மற்றும் மாகாண மந்திரியாயிருந்த சர். எஸ். குமாரசுவாமி ரெட்டியார் ஆகியோர் ஆவர். சிதம்பரனார் சிறையிலிருந்த காலத்தும், வெளிவந்த பின்னரும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கு தமது நன்றியைச் செலுத்தத் தவறவில்லை. இத்தகைய செய்நன்றி மறவாத செம்மல் சிதம்பரனாரின் பெயரும் புகழும், உணர்வும், உற்சாகமும் பரவும் வண்ணம் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

1. முதன் முதலில் கப்பல் ஓட்டிய தமிழர் என்ற பெருமை பெற்றவர் யார்?

அ) பெரியார் ஆ) காமராசர் இ) திருப்பூர் குமரன் ஈ) சிதம்பரனார்

2. சிதம்பரனாரால் தோற்றுவிக்கப்பட்ட சங்கம் எது?

அ) முச்சங்கம் ஆ) தமிழ்ச்சங்கம் இ) சுதேசி நாவாய்ச் சங்கம் ஈ) கடைச்சங்கம்

3. சிதம்பரனாருக்கு வழக்கறிஞர் பதவி மீண்டும் கிடைக்க உதவிபுரிந்தவர்களுள் ஒருவர்

அ) சர். எஸ்.குமாரசுவாமி ரெட்டியார் ஆ) சி.கே.சுப்பிரமணிய முதலியார்
இ) பரலி.சு. நெல்லையப்பர் ஈ)திரு. வேதியப்பப் பிள்ளை

4. சிதம்பரனார் எதற்காகக் கல்கத்தா சென்றார்?

அ) சொற்பொழிவாற்ற ஆ) அரசியல் கூட்டத்தில் கலந்து கொள்ள
இ) கப்பல் வாங்க ஈ) நண்பரைச் சந்திக்க

5. சிதம்பரனார் தமிழ் மக்களால் எவ்வாறு புகழப்பட்டார்?

அ) வ.உ.சி. ஆ) தென்னாட்டுத்திலகர் இ) தலைவர் ஈ) வீரர்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி - ஆ

1. உன் ஊரில் நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் ஒன்று வரைக. (8)

(அல்லது)

வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

* (உமது முகவரி: செல்வன் / செல்வி, 15 அண்ணா சாலை, தஞ்சாவூர் எனக் கொள்க.)

2. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக. (8)

அ) முன்னுரை - ஒருமைப்பாட்டு உணர்வு - வேற்றுமையின் விளைவு - ஒற்றுமையின் பயன் - வேற்றுமையில் ஒற்றுமை - முடிவுரை.

ஆ) முன்னுரை - கல்வியின் சிறப்பு - கல்வியின் பயன் - அனைவருக்கும் கல்வி - முடிவுரை.

இ) முன்னுரை - சேமிப்பின் தேவை - சேமிப்பு முறைகள் - திட்டத்தின் பயன் - முடிவுரை.

3. உமது பகுதியில் நடைபெற்ற ' சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு முகாம்' குறித்து ஓர்அறிக்கை எழுதுக. (4)

(அல்லது)

உமது பள்ளியில் நடைபெற்ற 'தமிழ் மன்ற விழா' குறித்து ஓர் அறிக்கை எழுதுக.

## பகுதி - இ

1. சான்று தருக (எவையேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) சொல்லிசை அளபெடை

அ) கலங்கு ஆ) கெடுப்பதூஉம் இ) குடிதழீஇ ஈ) உழா அர்

ii) உவமையாகு பெயர்

அ) நன்னூல் கற்றேன் ஆ) நாரதர் வருகிறார்
இ) பாலை இறக்கு ஈ) யாழ் கேட்டு மகிழ்ந்தேன்

iii) முதனிலைத்திரிந்த தொழிற்பெயர்

அ) மாதவி நடனம் ஆடினாள் ஆ) கபிலனுக்கு அடி விழுந்தது
இ) முருகன் பரிசு பெற்றான் ஈ) மக்கட் பேறு

iv) நிகழ்கால இடைநிலை

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

v) பால் வழு

அ) நாய் கத்தும் ஆ) மாமா வந்தது இ) செல்வி பாடினாள் ஈ) கண்ணன் வந்தாள்

2. நிரப்புக (எவையேனும் மூன்று மட்டும்) 3 X1 =

i) இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என்று ஏற்றுக் கொள்ளப்படுவது __________ ஆகும்.

அ) திணை வழு ஆ) கால வழு இ) வழுவமைதி ஈ) இட வழு

ii) பகுதி, இடை நிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு __________

அ) சந்தி ஆ) சாரியை இ) விகுதி ஈ) விகாரம்

iii) ஒரு வினை முற்று, வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறிப்பது __________

அ) தொழிற்பெயர் ஆ) பண்புப் பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

iv) காரியப் பொருள் கருவிப் பொருளுக்கு ஆகி வருவது __________

அ) கருவியாகு பெயர் ஆ) காரியவாகு பெயர்
இ) இடவாகு பெயர் ஈ) தானியாகு பெயர்

v) மேல் வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள் __________

அ) ற்,ன் ஆ) த், ந் இ) ட், ண் ஈ) க், ங்

3. கூரியவாறு செய்க (எவையேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) சுடுதல் (முதனிலைத் திரிந்த தொழிற்பெயராக்குக)

அ) சுடு ஆ) சூடு இ) சுட்டு ஈ) சுட்டது

ii) செய்யற்க (எதிர்மறை இடை நிலையை எழுதுக)

அ) செய் ஆ) அல் இ) ஆல் ஈ) க

iii) குயில் கத்தும் (வழு நீக்குக)

அ) குயில் அலறும் ஆ) குயில் கரையும் இ) குயில் அகவும் ஈ) குயில் கூவும்

iv) கோடல் (பிரித்து எழுதுக)

அ) கோ+டல் ஆ) கோடு+ல் இ) கோடு+அல் ஈ) கோ+அல்

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

v) சொல் (இதன் வேறு பெயர் எழுதுக)

அ) பதம் ஆ) மரம் இ) உண்டான் ஈ) காண்

4. இலக்கணக் குறிப்பு தருக (எவையேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) அரங்கம்

அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை
இ) செய்யுளிடை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

ii) கம்பர் படிக்கிறேன்

அ) கருத்தாவாகு பெயர் ஆ) காரியவாகு பெயர்
இ) கருவியாகு பெயர் ஈ) தானியாகு பெயர்

iii) கிலோ மீட்டர்

அ)நிறப்பண்பு ஆ) சுவைப்பண்பு
இ) வடிவப்பண்பு ஈ) அளவுப்பண்பு

iv) காணான்

அ) இறந்த கால இடைநிலை ஆ) எதிர்கால இடைநிலை
இ) எதிர்மறை இடைநிலை ஈ) நிகழ்கால இடைநிலை

v) முட்டையிட்டது சேவலா? பெட்டையா?
அ) விடை வழு ஆ) வினா வழு இ) பால் வழு ஈ) மரபு வழு

5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க (ஏதேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) அ) யானை கத்தும்
ஆ) யானை அகவும்
இ) யானை பிளிறும்
ஈ) யானை அலறும்

ii) அ) பகுபத்தில் குறைந்த அளவு இருக்க வேண்டிய உறுப்புகள் பகுதி, சந்தி
ஆ) பகுபத்தில் குறைந்த அளவு இருக்க வேண்டிய உறுப்புகள் பகுதி, விகுதி
இ) பகுபத்தில் குறைந்த அளவு இருக்க வேண்டிய உறுப்புகள் இடைநிலை, சாரியை
ஈ) பகுபத்தில் குறைந்த அளவு இருக்க வேண்டிய உறுப்புகள் சந்தி, சாரியை

iii) அ) நீர் என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நின், உன் எனத்திரியும்
ஆ) நீர் என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நினது, உனது எனத்திரியும்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

iv) அ) அளவைப் பெயர்கள் ஆறு வகைப்படும்
ஆ) அளவைப் பெயர்கள் நான்கு வகைப்படும்
இ) அளவைப் பெயர்கள் இரண்டு வகைப்படும்
ஈ) அளவைப் பெயர்கள் பதினாறு வகைப்படும்

v) அ) கழுத்திலிருந்து பிறப்பவை இடையின எழுத்துக்கள்
ஆ) கழுத்திலிருந்து பிறப்பவை மெல்லின எழுத்துக்கள்
இ) கழுத்திலிருந்து பிறப்பவை வல்லின எழுத்துக்கள்
ஈ) கழுத்திலிருந்து பிறப்பவை ஆய்த எழுத்துக்கள்

## பகுதி - ஈ

1. கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)

உலக நாடுகளின் பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று என்பது மொகஞ்சதாரோ - அரப்பா அகழ்வாய்வுக்குப் பிறகு நிறுவப்பட்டுள்ளது. கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னரே பரந்து விரிந்திருந்த இந்திய நாகரிகம் உலக நாகரிகங்கள் அனைத்திற்கும் தாயாகவும் வழிகாட்டியாகவும் விளங்கியிருக்கிறது. இவ்வாறு இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்த நாகரிகம் திராவிட நாகரிகம் எனக் கருதுகின்றனர்.

திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழியாகும். திராவிடம் என்னும் சொல் திராவிட நாடு எனும் பொருளைத் தருவது. திராவிட மொழிகள், திராவிட இனம், திராவிட நாகரிகம் முதலிய சொற்றொடர்களில் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல், தமது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலில் குறிப்பிட்டு உள்ளார். இவரே திராவிடம் என்னும் சொல்லைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார்.

தமிழையும் அதன் கிளைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளை ஒரு காலத்தில் 'தமிளியன்' அல்லது 'தமுலிக்' என்றழைத்தனர். அவற்றுள் தமிழ், மிகுந்த சிறப்பும் பழைமையும் பெற்ற மொழியே எனினும் பல திராவிட மொழிகளில் அதுவும் ஒன்று. எனவே, இவ்வின மொழிகள் அனைத்தையும் இணைத்துத் திராவிட எனும் சொல்லைத் தாம் கையாண்டதாகக் கால்டுவெல் கூறியுள்ளார்.

1. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பரந்து விரிந்திருந்த நாகரிகம் எது?

அ) உலக நாகரிகம் ஆ) இந்திய நாகரிகம் இ) ஆசிய நாகரிகம் ஈ) மேலை நாகரிகம்

2. திராவிடம் என்னும் சொல்லைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தவர் யார்?

அ) இந்தியர் ஆ) தமிழர் இ) கால்டுவெல் ஈ) ஆங்கிலேயர்

3. தென்னிந்திய மொழிகளை முன்பு எவ்வாறு அழைத்தனர்?

அ) தமுலிக் ஆ) தோடா இ) மால்தோ ஈ) பிராகுய்

4. இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்த நாகரிகம்

அ) அரப்பா நாகரிகம் ஆ) மொகஞ்சதாரோ நாகரிகம்
இ) சீன நாகரிகம் ஈ) திராவிட நாகரிகம்

5. தென்னிந்திய மொழிகளில் மிகுந்த சிறப்பும், பழைமையும் பெற்ற மொழி யாது?

அ) தெலுங்கு ஆ) கன்னடம் இ) தமிழ் ஈ) மலையாளம்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

2. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதுக.

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி என்பவை கடலைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள். இவ்வாறே மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பல பெயர்கள் வழங்குகின்றன. அவை, கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கலத்தைக் குறிக்கும். இச் சொற்களைக் கொண்டே பண்டைத் தமிழர்களின் கடற்பயணம் பற்றித் தெளிவாக அறியலாம். உப்பங் கழிகளில் செலுத்துதற்குரிய சிறிய படகுகளும் கடலில் செலுத்துதற்குரிய பெரிய நாவாய்களும் அன்றிருந்தன. நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு தறியில் கட்டப்பட்ட யானை அசைவது போல் அசைந்தன. அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின எனப் பட்டினப்பாலை கூறுகின்றது.

பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டே இயங்கின. அவை பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன. இதற்குக் காற்று எவ்வப்போது எவ்வெத்திசை நோக்கி வீசும் என்று உணர்வது அடிப்படையாகும். இதனைத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனைப் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

1. 'பௌவம்' எனப்படும் சொல் எதனைக் குறிக்கிறது?

அ) நிலம் ஆ) கடல் இ) காற்று ஈ) வானம்

2. மரக்கலத்தின் மறுபெயர்களில் இதுவும் ஒன்று

அ) பஃறி ஆ) முந்நீர் இ) ஆழி ஈ) புணரி

3. கடலில் செல்லும் பெரிய கப்பலின் பெயர் யாது?

அ) வங்கம் ஆ) புணை இ) தெப்பம் ஈ) நாவாய்

4. அக்காலத்தில் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தியவர் யார்?

அ) கப்பலோட்டிகள் ஆ) கரிகாலனின் முன்னோர்
இ) சேரர்களின் முன்னோர் ஈ) மாலுமிகள்

5. பாய்மரக்கப்பல்கள் எவ்வாறு இயங்குகின்றன?

அ) துடுப்பினால் ஆ) இயந்திரத்தினால்
இ) காற்றின் துணைகொண்டு ஈ) நிலக்கரியினால்

3. கீழ்க்காணும் செய்யுள் வரிகளைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. (4)

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

1. தெண்கடல் வளாகம் - இதன் பொருள்

அ) தெற்குக்கடல் ஆ) விரிந்த கடல் இ) விரிந்த வளாகம் ஈ) தெளிந்த நீர் நிறை

2. துஞ்சான் - எனக்குறிப்பிடப்படுபவர் யார்?

அ) மக்கள் ஆ) அரசர் இ) வேடன் ஈ) செல்வன்

3. செல்வத்துப் பயன் யாது?

அ) தானே நுகர்தல் ஆ) ஈந்து மகிழ்தல் இ) சேர்த்து வைத்தல் ஈ) பயனற்று கிடத்தல்

4. இப்பாடல் இடம் பெற்ற செய்யுள்

அ) கலிங்கத்துப்பரணி ஆ) முத்தொள்ளாயிரம் இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

4. விடையளிக்க (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2 x 5 = 10

அ) திராவிட மொழிகளுள் தமிழ்மொழி பெறுமிடம் யாது?
ஆ) சமுதாய மேம்பாட்டிற்கு பாரதியின் பங்களிப்பு யாது?
இ) அக்காலத்தில் பூம்புகார் எவ்வாறு விளங்கியது?
ஈ) புலம் பெயர்ந்த தமிழர்கள் தாயகத்துடன் கொண்டுள்ள தொடர்பு எத்தகையது?
உ) தமிழகத்தில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் பற்றி எழுதுக.

5. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க 2 x 4 = 8

அ) பிறர் செய்த தீங்கினை எங்கனம் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்?
ஆ) மன்னன், விதுரனிடம் யாது கூறித் தூது அனுப்பினான்?
இ) சிறுபஞ்ச மூலம் பெயர்க்காரணம் மற்றும் வனப்புகளாகக் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.
ஈ) குறுந்தொகைப் பாடலில் தலைவனது நாடும், நட்பும் எங்கனம் சிறப்பிக்கப்படுகின்றன?

6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 x 8 = 8

அ) ரஷீதுக்கு மாங்கன்று எவ்வாறு கிடைத்தது?
ஆ) கண்ணதாசனின் கவியின்பத்தை விவரி.
இ) கெலன் கெல்லர், தமது கனவில் முதல் நாள் கண்ட காட்சிகள் யாவை?

>>>>>>>>>>>>><<<<<<<<<<<<<

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers